# 'பா.ஜ.க.வில் நாடார்களின் ஆதிக்கம்'!

## – தொண்டரின் குமுறல் கடிதம்!

**தமிழக பா.ஜ.க. தலைவராக பொன்.ராதாகிருஷ்ணன் நியமிக்கப்பட்டு இன்னும் மூன்று மாதங்கள் கூட நிறைவடையவில்லை. ஆனால், அதற்குள் 'நாடார் பிரமுகர்களுக்கே கட்சிப் பதவிகளைக் கொடுக்கிறார்' என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. குறிப்பாக, தென் மாவட்டங்களில் இப்படிச் செய்கிறார் என்று சுட்டிக்காட்டி 'உண்மைத் தொண்டன்' என்ற தலைப்பில் ஒரு கடிதம் உலா வருகிறது. அந்தக் கடிதத்தின் நகல் நமக்கும் கிடைத்தது. இதோ உண்மைத் தொண்டரின் உள்ளக் குமுறல் இங்கே.**

தமிழக பாரதீய ஜனதா கட்சியின் தலைவராக முன்னாள் மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் பதவியேற்ற பின் மாநில நிர்வாகிகள் பட்டியல் வெளியிடப்பட்டது. நாடார் சமூகத்தைச் சார்ந்தவர்களான டாக்டர் தமிழிசை சௌந்தர்ராஜன் மாநில துணைத் தலைவராகவும், சரவண பெருமாள் மாநில பொதுச்செயலாளராகவும் அறிவிக்கப்பட்ட போதுகூட தொண்டர்கள் இதை சாதாரண நிகழ்வாகவே எடுத்துக் கொண்டனர். ஆனால், அதன் பின்புதான் சூட்சுமம் தெரிந்தது.

குமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களில் அதாவது தென் தமிழ்நாட்டின் மாவட்டத் தலைவர்களாக பெரும்பாலும் நாடார் சமூகத்தினரே நியமிக்கப்பட்டனர். குறிப்பாக, குமரி மாவட்டத்திற்கு தர்மராஜ், திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஜோதி விஷ்ணு, தூத்துக்குடி மாவட்டத்திற்கு கனகராஜ் எனத் தொடர்ந்து மகாஜன சபை பட்டியல்.. இதில் ஜோதி விஷ்ணு, கனகராஜ்இருவரும்பலமுறைமாவட்டத்தலைவர்களாக இருந்து கட்சியை வளர்த்து (அழித்து) உள்ளனர்.

மாவட்டத்தின் மாநில பிரதிநிதிகளாக குமரிக்கு வேல்பாண்டியன், தூத்துக்குடி, திருநெல்வேலிக்கு அன்புராஜ் என இருவரும் அதே பட்டியலோடு இணைந்தனர்.

தேவர் சமூகத்தினரும், பிள்ளைமார் சமூகத்தினரும் கணிசமாக உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் மாவட்டத் தலைவர் ஜோதிவிஷ்ணு, மாவட்ட துணைத் தலைவர் எம்.ஆர். கந்தசாமி, மாவட்ட பொதுச் செயலாளர் கலைச்செல்வன், மாவட்ட அமைப்புச் செயலாளர் சுரேஷ் என அதிகாரப் பதவிகள் அனைத்தும் நாடார் சமூகத்தினருக்கே வழங்கப்பட்டது. கட்சி புரோட்டாகால்படி கட்சி நிர்வாகி தனது எண்ணத்தை, கருத்தை, குறையை மாவட்ட அமைப்புச் செயலாளர், பொதுச் செயலாளர், தலைவர், மாநில பிரதிநிதி, மாநில பொதுச்செயலாளர், மாநிலத் தலைவர் என்ற ரீதியில் தான் கொண்டு செல்ல இயலும். அப்படிக் கொண்டு சென்றால்தான் அது முறையானது என அங்கீகரிக்கப்பட்டு அதற்கு செவி சாய்ப்பது குறித்து ஆலோசனையாவது செய்யப்படும். ஆனால், இந்தப் பதவிகள் அனைத்திலும் குறிப்பிட்ட ஒரே சமூகத்தினரே நியமிக்கப்பட்டுள்ளது தொண்டர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது.

விளைவு, சங்கரன் கோயில் தாலுகா, மேலநீலிதநல்லூர் யூனியன் தலைவராக உள்ள தேவர் சமூகத்தைச் சார்ந்த தங்கராஜ் என்பவர் குறிப்பிட்ட சமூகத்தினரின் ஆதிக்கத்தைக் கண்டித்து கட்சியிலிருந்து விலகி விஸ்வ ஹிந்து பரிஷத்துக்கு சென்றுவிட்டார். நெல்லை மாநகராட்சியின் ஒரே பி.ஜே.பி. கவுன்சிலர் பாலமுருகன். விஸ்வகர்மா சமூகத்தைச் சேர்ந்தவர். அவர் கவுன்சிலர் ஆன பின்பும் கடந்த மூன்று வருடங்களாக எந்தப் பதவியும் வழங்கவில்லை. எனவே, குறிப்பிட்ட சமூகத்தினரின்